22.1.2024 வா.சா.1 விஜயராஜசெல்வம் (பக்கம் 3 )

அ.வ.எண்.235/2012

3 மற்றும் 4 பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை =

வாதிகளான என்னையும் என்னுடைய சகோதரியை தவிர வேறு எதாவது வாரிசுகள் என்னுடைய தந்தைக்கு உள்ளனரா என்றால் இல்லை. 1 மற்றம் 2 பிரதிவாதிகள் எங்களுடைய பெற்றோர் ஆவார். 12.10.1989 அன்று நான் பிறந்தேன். 25.11.1993 அன்று 2ம் வாதி பிறந்தார். தாவா சொத்து ஆதியில் அமுல்ராஜ் என்பவருக்கு பாத்தியப்பட்டது ஆகும். தாவா சொத்து மனஞ்சேரி, தேவேந்திர நகரில் உள்ளது. திருபெரும்புதூர் வட்டத்தில் உள்ளது. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை பொது அதிகாரம் பத்திரம் மூலமாக பொது அதிகாரம் ஏற்படுத்தி கொடுத்தனர். நான் சிறு பையனாக இருந்தபோது இதுபோன்று பொது அதிகார பத்திரம் ஏற்படுத்தி கொடுத்ததை என்னுடைய பெற்றோர் என்னிடம் சொன்னார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பொது அதிகார பத்திரத்தின் படி 4ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை கிரயம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி கிரயம் ஏற்படுத்திய பின்னர் அதற்குரிய கணக்கு வழக்குகளை என்னுடைய பெற்றோரிடம் ஒப்படைத்துவிட்டனர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது பெற்றோருக்கு தான் தெரியும். 4ம் பிரதிவாதியின் பெயருக்கு எந்த ஆண்டு கிரய பத்திரத்தை 3ம் பிரதிவாதி ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் 2006ம் ஆண்டு ஆகும். 4ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். இவ்வழக்கை தாக்கல் செய்த கால கட்டத்தில் தாவா சொத்திற்கான அரசு வழிகாட்டு மதிப்பு என்ன என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. தற்போதையா அரசு வழிகாட்டு மதிப்பு என்ன என்று எனக்கு தெரியாது. ஆனால் சந்தை மதிப்பு ரூ.சுமார் 70 லட்சம் இருக்கும்.

(2 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)